**செப்டம்பர் 21**

## *புனித மத்தேயு*

இவர் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவர். முதல் நற்செய்தி நூலை எழுதியவர். இவருடைய தந்தையின் பெயர் அல்பேயுஸ். கப்பர்நகூம் என்னும் ஊரில் சுங்கத்துறையில் அமர்ந்து வரி வசூலித்துக் கொண்டிருக்கையில் இயேசு இவரைக் கூப்பிட்டார். இவர் உடனே அனைத்தையும் துறந்துவிட்டு இயேசுவைப் பின்தொடர்ந்தார். அந்நாட்டு மக்கள் பேசிய மொழியில் நற்செய்தி நூலை அரமேய்க் மொழியில் எழுதினார். அதுவே யூத மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்களுக்கு என எழுதப்பட்டது. "பழைய ஏற்பாட்டில் வாக்களிப்பட்ட மெசியா அவரே. அபிரகாம் தாவீது இவர்களது வம்சத்தில் பிறந்தவர் இயேசு" என மத்தேயு எழுதியிருக்கிறார். பழைய ஏற்பாட்டின் வசனங்களை இவர் ஏறக்குறைய எழுபது முறை தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறார். இயேசுவின் குழந்தைப் பருவத்தைப் பற்றி பல விவரங்களை இவர் தருகிறார். அபிரகாமிலிருந்து தலைமுறை வரிசையை அழகாக எடுத்துரைக்கிறார். இவரது பழைய பெயர் லேவி. இயேசு அழைத்ததும் அனைத்தையும் விட்டு விட்டு மகிழ்ச்சியுடன் இயேசுவை பின்சென்ற இவர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட பின் பாலஸ்தீன நாட்டில் வேதம் வேதம் போதித்தார். இவர் பரலோகத்தைப் பற்றி அடிக்கடி சிந்தித்துக் கொண்டு வந்ததாகவும், சொற்ப உணவு உண்டதாகவும், புனித சாந்தப்பர் கூறுகிறார். புனித மத்தேயுவை வேதத்துக்கா கல்லால் எறிந்து கொன்றதாக கருதப்படுகிறது. யூப்ரெட்டிஸ் நதியின் அருகில் மரபுக் என்னும் இடத்தில் இவர் இறந்தார்.

**சிந்தனை:**

இயேசுவின் அழைப்புக்கு இவர் உடனே மகிழ்ச்சியுடன் கீழ்ப்படிந்தார். தம் பழைய தொழிலுக்கு இவர் திரும்பியவரல்ல. தினமும் இயேசு தம்முடன் பேசுகிறார். நாம் தாமதமின்றி மகிழ்ச்சியுடன் செவி கொடுப்போம்.

**செபம்:**

ஆண்டவரே, நாங்கள் உமது குரலைக் கேட்க என்றும் விழிப்பாயிருக்கும் வரம் தாரும்.